Registered as a News Paper in Ceylon

★

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்
டொலர் கோர்ப்பரேஷன்
கொழும்பு

ஈழநாடு
EELA NADU
National Tamil Daily
தேசிய தினசரி
தபால் பெட்டி எண். 49 போன்:389
மலர் 13 ஆனி 6 ரபி:ஆகி 26 (20—6—71) ஞாயிற்றுக்கிழமை இதழ் 128

முற்றிலும் புதிய முறையில்
தயாரிக்கப்பெற்ற
லாலா சோப்
வடமாகாணத்தில்
எங்கும் விற்பனையாகிறது
லாலா சோப்பின் மேலுறைகளை
சேகரியுங்கள்
பரிசுப்போட்டியை
விரைவில் எதிர்பாருங்கள்
லாலாசோப் தொழிற்சாலை
அச்சுவேலி

21 JUN 1971

தமிழ் நாட்டில் மதுவிலக்கு சட்டம் ஆகஸ்ட் முதல் ரத்து!

போக்குவரத்து சேவை தேசியமயமாகும்

சென்னை, ஜூன் 19

தமிழ்நாட்டில் இதுவரை காலமும் அமுலில் இருந்துவந்த மதுவிலக்குச் சட்டம் ஆகஸ்ட் 30ம் திகதியிலிருந்து அகற்றப்படவிருக்கிறது. இத்தகவலை தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி இன்று தமிழ்நாடு சட்டசபையில் அறிவித்தார்.

தமிழ்நாட்டுக்கான 1971-72ம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தை முதலமைச்சர் திரு. கருணாநிதி இன்று சமர்ப்பித்துப் பேசினார்.

"இந்திய நாட்டின் எல்லா மாநிலங்களிலும் ஒரேசீராக மதுவிலக்குச் சட்டத்தை அமுல் நடத்த மத்திய அரசு முன்வரும் வரையில் இச்சட்டத்தை ரத்துச் செய்வதைத் தவிர வேறு வழியில்லை. சிறைச்சாலைகளில் கைதிகள் நிரம்பி வழிவதற்கும் நோயாளிகள் பெருகுவதற்கும் இந்த மதுவிலக்குச்சட்டந்தான் காரணம் என்ற உண்மையை ஏற்றுக்கொள்வதில் நான் வெட்கப்படத் தேவையில்லை, இந்த மதுவிலக்குச் சட்டத்தினால் தமிழ்நாடு பெருந்தொகை வருமானத்தை இழந்து வருகிறது' என்று திரு. கருணாநிதி கூறினார்.

தேசியமயம்

தமிழ்நாடு அரசாங்கம் தமிழ்நாட்டிலுள்ள போக்குவரத்துச் சாதனங்களையும் தேசியமயமாக்குவதற்கு முடிவு செய்துள்ளது. ஐம்பதுக்கும் அதிகமான பஸ்களுடன் இயங்கிவரும் தனியாருக்குச் சொந்தமான போக்குவரத்து ஸ்தாபனங்களை தேசியமயமாக்குவது என்றும் 10 பஸ் வண்டிகளுக்கு மேற்பட்ட எந்தப் போக்குவரத்து ஸ்தாபனத்திற்கும் அரசாங்கம் லைசென்ஸ் வழங்குவதில்லை என்றும் தமிழ்நாடு அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

பட்டம்பெற்ற இளைஞர்களைக் கொண்ட சமூக சேவை அமைப்பொன்றும் தமிழ்நாட்டில் அமுல்நடத்தப்படவிருக்கிறது. சமூக சேவைப் பணிக்கு முதலில் கல்வி, மருத்துவம், விவசாயம், பொறியியல் கலை போன்ற பாடங்களில் பட்டம்பெற்றவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவிருக்கிறார்கள். இப்படிச் சேர்க்கப்படும் பட்டதாரி இளைஞர்கள் முதலில் கிராமங்களில் சேவையாற்ற விடப்படுவார்கள். இச்சமூக சேவையில்செயலாற்றுவதற்காக மாதாந்தம் கௌரவச் சம்பளமாக ரூ. 175 கொடுக்கப்படும்.

இந்த வரவு-செலவுத் திட்டத்தில் மேலும்பல முன்னேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மின்சாரவாரியத்திற்கு அதிகரிக்கப்பட்ட வரிகளிதனால் முழுவதும் மின்சார அபிவிருத்திக்காகவே செலவிடப்படுமாம்.

இதுவரை காலமும் விவசாயிகளுக்கு கொடுத்துவந்த நீண்டகாலக் கடன்தொகை 3 கோடியிலிருந்து 21கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. காட்டு நிலங்களாக இருக்கும் ஆனால் பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்தக்கூடிய 50 ஆயிரம் ஏக்கர் நிலத்தை ஏழை மக்களுக்கு வழங்கப்படும்.

கல்வி அபிவிருத்திக்கென 81 கோடியே 84லட்ச ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. ஹரிஜன நலத்திற்கென 7 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. கல்லூரிகளில்படிக்கும் ஹரிஜன மாணவர்களுக்கு வருடத்திற்கு இரண்டு சீருடைத் தொகுதிகள் வழங்கவும் கல்லூரி விடுதிகளில் இருக்கும் அம்மாணவர்களின் உணவுக்கு இதுவரை அளித்துவந்த உதவிப்பணத்தை அதிகரிக்கவும் வரவு-செலவுத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

......

புதுவகை மிளகாய்விதைக்கு வரவேற்பு

பருத்தித்துறை, சனி

ஜப்பானிய மிளகாயாகிய "செஞ்சுடர் சந்தாக்கா" என்னும் புதுவகை மிளகாய் விதைகளும், நாற்றுகளும், நேற்றுமுன்தினம் கோவிற்கடவை இளம் விவசாயிகள் சங்கத்தினர் விவசாயிகளிடமும் பொதுமக்களிடமும் விநியோகித்தனர். கோவிற்கடவை ஆலயமுன்றலில் நடைபெற்ற இவ்வைபவத்திற்கு விவசாயப் போதனாசிரியர் திரு. எஸ். கிருஷ்ண பிள்ளை தலைமை தாங்கி இப்புதுவகை மிளகாய்ச் செய்கை பற்றியும் அதன் நன்மைகள் பற்றியும் விளக்கினார்.

ஊரடங்கு நேரம்

இரவு 10-00 மணி முதல் காலை 4-00 மணி வரை

இலங்கை வருவோருக்கு 5 நாள் வைத்திய சோதனை

வாந்தி நோய் தடுப்பு நடவடிக்கை

கோட்டை, சனி

வாந்திபேதி நோய் தடுப்பு நடவடிக்கையில் சுகாதாரப் பகுதி தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இந்தியாவிலிருந்து வரும் எவரும் வயிற்றோட்ட நோயினால் பாதிக்கப்பட்டிருந்தால் அவர்கள்மீது மிகவும் கவனமாக இருக்குமாறு சுகாதாரப்பகுதி சகல வைத்திய நிலைய பொறுப்பாளர்களுக்கும் அறிவித்துள்ளது.

இந்தியாவில் வாந்திபேதி நோய் பரவியுள்ள இடங்களிலிருந்து வருபவர்களை 5 நாட்கள்வரை வைத்திய கண்காணிப்பில் வைத்திருக்கவும் சுகாதாரப்பகுதி தீர்மானித்துள்ளது. கள்ளக்குடியேற்றக்காரர் மூலமாக இந்த நோய் பரவாமல் பாதுகாத்துக் கொள்ளுமாறு டாக்டர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

பூமிக்கப்பால் உயிரினம்!

பொன்னம்பெருமா கூறுகிறார்

கோட்டை, சனி

உயிரினத்தின் ரசாயன வளர்ச்சியின் கோட்பாடுகள் விண்வெளிக் கல்லொன்றின் மூலம் பெறப்பட்டுள்ளன. விண்வெளிக்கல்லொன்றை பரிசோதனை செய்த இலங்கை விஞ்ஞானியான பொன்னம்பெருமா இதில் 18 அமினோ திராவகங்கள் இருப்பதை கண்டுபிடித்துள்ளார்.

இவை பூமிக்கப்பால் உயிரினங்கள் வாழ்வதற்கு சான்று பகருவதாக பொன்னம்பெருமா தெரிவித்துள்ளார். விண்வெளிக் கல்லிலுள்ள அமினோ திராவகங்கள் உயிர்க்கலங்களை வளர்ப்பதற்குப்பயன் படக்கூடியது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

—

செனட்சபைக்கு மகாதேசாதிபதி நன்றி

கோட்டை, சனி

செனட்சபை சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றிதெரிவிக்கும் பிரேரணையை நிறைவேற்றியமைக்காக நன்றி தெரிவித்து நற்செய்தியொன்றை மகாதேசாதிபதி திரு.வில்லியம் கோபல்லாவ செனட்சபைக்கு அனுப்பி வைத்துள்ளார். இன்று செனட்சபை கூடியபோது இச்செய்தி வாசிக்கப்பட்டது. செனட் மீண்டும் இம்மாதம் 24ந் திகதி கூடவிருக்கிறது.

—

ஆசிரியர்கள்

இடமாற்றம் பெற விண்ணப்பிக்கலாம்

கோட்டை,சனி

தாங்கள் சேவை செய்யும் மாவட்டத்திலிருந்து வேறு மாவட்டங்களுக்கு அடுத்த வருடம் முதல் இடமாற்றம் பெறவிரும்பும் ஆசிரியர்கள் தங்களது அதிபர்கள் மூலம் பிராந்திய கல்வி அலுவலகத்துக்கோ, மாவட்ட கல்வி அலுவலகத்துக்கோ தங்களது விண்ணப்பங்களை அனுப்பி வைக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

பனம்பொருள் நிலையத்துக்கு பாராட்டு

சுழிபுரம், சனி

மாதகல் மத்திய கிராம முன்னேற்றச் சங்கத்தினரால் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் பனம்பொருள் உற்பத்தி தொழிற்சாலைக்கு நேற்றுமுன்தினம் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு விமல் அமரசேகரா விஜயம் செய்தார் தலைவர் திரு ச. யோசவ் அரசாங்க அதிபரை வரவேற்று தொழிற்சாலையைச் சுற்றிக் காட்டினார்.

அரசாங்க அதிபருடன் விஜயம்செய்த வலிமேற்கு காரியாதிகாரி திரு நடராசா இத் தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் பனங்கட்டி வெல்லம் முதலியன அரசினரால் கீரிமலையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் பனம்பொருள் ஆராய்ச்சி நிலையத்தில் தயாராகும் பனங்கட்டிவெல்லம் ஆகியவற்றின் தரத்திற்கு நிகராக இருப்பதாகப் பாராட்டினார்.

தோடம்பழம் பத்து சதம்

கோட்டை, சனி

பிபிலையில் தோடம்பழம் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுவதாகவும் இங்கு ஒரு தோடம்பழம் 5 சதத்திலிருந்து 10 சதம் வரை விற்பனைசெய்யப்படுவதாகவும் அரசாங்க தகவல்பகுதி நேற்று அறிவித்தது. நாட்டின் ஏனைய பகுதிகளிலும் தோடம்பழம் மலிவு விலையில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

16பேர் கைது; பலர் சரண்

கோட்டை, சனி

நேற்று பதினாறு பயங்கரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளதாக தகவல் திணைக்களம் அறிவித்தது. இவர்களிடம் பயங்கர ஆயுதங்களும் வெடிமருந்துகளும் இருக்கக்காணப்பட்டனவாம். மூன்று பயங்கரவாதிகள் பாதுகாப்புப் படைகளிடம் சரணடைந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது.

வரி விளம்பரம்

தேவை

பிறின்ரிங், ரச்சிங் அனுபவமும் 30 வயதிற்குட்பட்டவரும், ஸ்ருடியோவில் வேலை செய்வதற்கு தேவை. விபரங்களுக்கு: மனேச்சர், லக்கி போட்டோ, மன்னார். 3189

விஞ்ஞான ரீதியில் விவசாயத்தை தொழிலாக விரும்பும் விவேகமும் எதிர்கால வாழ்வை சீராக்கும் ஆர்வமுள்ள படித்த இளைஞர் விண்ணப்பிக்கவும். லக்குமி தோட்டம், வெள்ளாங்குளம். 3190

பலாலியில் நியமனம் பெறுவர்?

யாழ்ப்பாணம், ஞாயிறு

பலாலி கனிஷ்ட பல்கலைக்கழகத்தின் கணக்குப் பதிவியல்துறை விரிவுரையாளராகக் கடமையாற்றிய திரு. ந. ஞானேந்திரா, ஆங்கில விரிவுரையாளர்களாகக் கடமையாற்றிய செல்வி எம். தம்பிப்பிள்ளை, திரு. எஸ் குலராஜசேகரசிங்கம், திரு. என் ராஜசிங்கம் ஆகியோர் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு விரிவுரையாளராக நியமனம் பெறுவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

குடத்தனைக் கிராமசபை
கேள்வி விளம்பரம்

குடத்தனைக் கிராமசபைத் தலைவரால், குடத்தனை கரையூர் தெருவுசாலை வீதி, பனைநின்றான் காடு வீதி வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் 29-6-71-ந் திகதி காலை 10-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

ஒவ்வொரு வேலைக்கும் கேள்விப் பிணைப்பணம் ரூபா 50/-ம் கேள்விப்பத்திரப் பணம் ரூபா 10/-ம் கட்டியதன் பேரில் 27-6-71-ந் திகதி நண்பகல் 12-00 மணி வரையும் கேள்விப் பத்திரங்கள் கொடுக்கப்படும்.

வேறு விபரங்கள் கந்தோர் நேரங்களில் கந்தோரில் அறிந்துகொள்ளலாம்.

வ. துரையப்பா,
தலைவர்,
குடத்தனைக் கிராமசபை.

கி. ச. கந்தோர்,
குடத்தனை.
16-6-71. 2857

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

கேள்வி விளம்பரம்

புதுக்குடியிருப்பு கி. ச. தலைவரால் ரூபா 6000/-க்கு மேல் பதிவு செய்த ஒப்பந்தகாரரிடமிருந்து கேணியடி பாண்டியன் ரோட்டுக்கும், வெள்ளுடுவையடி ரோட்டுக்கும் 29-6-71 காலை 11 மணி வரை பதிவு செய்த கேள்விகள் ஏற்கப்படும். கேள்விப் பத்திரம் பெறுவோர் 1வதுக்கு கேள்விக்காசு ரூபா 60/-ம், பத்திரக்காசு ரூபா 12/-ம், 2வதுக்கு கேள்விக்காசு ரூபா 50/-ம் பத்திரக்காசு ரூபா 10/-ம் 28-6-71க்கு முன் கட்டிப் பெறவேண்டும். பத்திரக்காசு திருப்பிக் கொடுபடமாட்டாது. விபரங்கள் யாவும் முல்லைத்தீவு பிராந்திய இலாகாப் பொறியியலாளர் அவர்களிடமும் புதுக்குடியிருப்பு கி. ச. காரியாலயத்திலும் வேலை நேரங்களில் பார்வையிடலாம்.

சி. சிதம்பரப்பிள்ளை,
புதுக்குடியிருப்பு
கி. ச. தலைவர்.

2858

தையற் பொருட்காட்சி

யாழ்ப்பாணம், ஞாயிறு

புன்னாலைக்கட்டுவன் அரசினர் பாடசாலை மண்டபத்தில் நாளை தையற் பொருட்காட்சி ஒன்று இடம்பெறும். புன்னாலைக்கட்டுவன் அரசினர் தையல் நிலையத்தில் தயாரிக்கப்பட்ட பொருட்கள் இங்கு காட்சிக்கு வைக்கப்படும்.

கிராமஅபிவிருத்திஇலாகா உப அதிபர் திருமதி யோஹஹே அன்று பிற்பகல் 2-30 மணிக்கு காட்சியைத்திறந்துவைப்பார்.

ஆசிரியருக்கு மீண்டும் வேலை; கல்விமந்திரிக்குப் பாராட்டு

உரும்பராய், சனி

"ஆசிரியர்கள் ஏதாவது ஒரு தொழிற்சங்கத்தில் அங்கத்தவராயிருத்தல் வேண்டும். அப்போதுதான் உரிமைகளைப் பெறமுடியும். வேலைநீக்கம்செய்யப்பட்ட நூற்றுக்கு மேற்பட்ட ஆசிரியர்களைத் திரும்பவும் வேலைக்கெடுத்த கல்விமந்திரியை பாராட்டவேண்டியது ஆசிரியர்கள் கடனாகும். தகுதி, சேவைக்காலம் முதலியவற்றை அடிப்படையாய் வைத்து ஆசிரியர்களுக்குப் பதவிஉயர்ச்சி வழங்க கல்விமந்திரி நடவடிக்கைகளை மேற்கொள்ளுவார் என்று நம்புகிறேன்"

வடஇலங்கைத் தமிழாசிரியர் சங்கத் தலைவர் பண்டிதர் ச பொன்னுத்துரை சங்க நிர்வாக மகாநாட்டுக்குத் தலைமைதாங்கிப்பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

முதலாந் தரத் தலைமையாசிரியர் பதவி உயர்ச்சிக்கான இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாத சங்க அங்கத்தவர்களின் விண்ணப்பங்களைப் பொதுக்காரியதரிசி திரு. ஆ. க. மாணிக்கம் குறித்த சபையில் சமர்ப்பித்து உரையாற்றினார்.

பதவிஉயர்ச்சி, இடமாற்றம், வாரத்தில் ஆறு நாட்களில் ஆறு மணித்தியால வேலை போன்ற பல விஷயங்களையிட்டு வித்தியா பகுதியுடன் பேட்டி நடத்துதல் வேண்டுமென்று சங்க உபதலைவர் திரு. த இராசேந்திரம் குறிப்பிட்டார். அகில இலங்கை ரீதியில் வடபிரதேச வித்தியாதிபதியையும் மகாவித்தியாதிபதியையும் பேட்டிகண்டு பேசுவதென முடிவுசெய்யப்பட்டது.

பனங் கள்ளை போத்தலில் அடைக்கும் தொழில்

சங்கானை ம. நோ, கூ. ச. சமாஜம் ஆரம்பிக்கும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

பனங்கள்ளைப் போத்தல்களில் அடைக்கும் தொழிலை சங்கானைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சமாஜம் விரைவில் தொடங்கக்கூடுமென அறியப்படுகிறது

சங்கானைப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க சமாஜ இயக்குநர் சபையின் முதலாவது கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்ற போது பனங்கள்ளைப் போத்தலில் அடைக்கும் தொழிலை சமாஜம் ஆரம்பிக்கவேண்டுமென்றும் இதன் மூலம் சமாஜத்துக்கு இலாபம் கிடைப்பதுடன் பலருக்கு வேலைவாய்ப்பளிக்க முடியுமென்றும் இயக்குநர் சபையின் நியமன உறுப்பினர்களில் ஒருவரான திரு. வி. சிவரத்தினம் தெரிவித்தார். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சங்கானைக் கிளைத்தலைவருமான திரு. சிவரத்தினம் தமது யோசனையைத் தெரிவித்துப் பேசுகையில் போத்தலில் பனங்கள் அடைக்கும் தொழிலுக்கான திட்டத்தைத் தாம் தயாரித்துள்ளதாகவும் அதிக செலவில்லாமலே இதைச் செயல்படுத்த முடியுமென்றும் தெரிவித்தார்

இந்த யோசனையைச் செயல்படுத்துவது சாத்தியமாவென்பது பற்றி ஆராயும்படி கூட்டுறவுத்துறை ஆணையாளரைக் கேட்பதென இயக்குநர் சபை முடிவுசெய்ததாகத் தெரிகிறது

……

ஈச்சமோட்டை சாம்பியன்

யாழ்ப்பாணம், ஞாயிறு

நல்லூர் சங்கிலியன் மன்றத்தினர் அண்மையில் நடாத்திய 'ஆறு விளையாட்டு வீரர்களைக் கொண்ட, ஆறு ஓவர்' மென்பந்துக் கிரிக்கெட் போட்டியில், ஈச்சமோட்டை யூனைட்டெட் விளையாட்டுக் கழகம் சாம்பியன் வெள்ளிக் கிண்ணத்தைப் பெற்றது.

இப்போட்டியில் மொத்தம் 12 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றின. இறுதியில் நடைபெற்ற போட்டிகளில், ஈச்சமோட்டை யூனைட்டெட் கழகம் அரியாலை யுத் விளையாட்டுக் கழகத்தையும், திருநெல்வேலி சிவன் விளையாட்டுக் கழகத்தையும் வெற்றி பெற்று சாம்பியன் பட்டத்தை சுவீகரித்தது. — (தே நி)

அல்வாய் வெற்றி

வல்வெட்டித்துறை, சனி

அல்வாய் இ வா. கழகத்திற்கும் அல்வாய் வடக்கு நக்கீரன் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையே நடைபெற்ற கைப்பந்தாட்டப் போட்டியில் அல்வாய் இ வா கழகம் 15-11, 16-14 புள்ளிகள் பெற்று வெற்றியீட்டியது.

அல்வாய் இ வா கழகத்திற்கும், காந்தியூர் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையே நடைபெற்ற கைப்பந்தாட்ட போட்டியில் முதல் இரு ஆட்டங்களிலும் அல்வாய் இ வா கழகம் வெற்றியீட்டியது. இப்போட்டிக்கு ஆசிரியர் திரு. சி. நல்லதம்பி மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

தீக்குளிப்பு

பருத்தித்துறை, சனி

புத்தூர் கிழக்கு குருநாதர் கோவிலில் பக்தர் எஸ். சின்னத்தம்பி தலைமையில் பலர் நேற்றிரவு தீக்குளித்துத் தமது நேர்த்திக்கடனைச் செலுத்தினர். இதையடுத்து விசேஷ பூசையும் பஜனையும் நடைபெற்றன

திரு. சின்னத்தம்பி இதுவரை 60 தடவைகள் வரை இலங்கையின் முக்கிய ஆலயங்களில் தீக்குளித்துள்ளார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

ஞாயிறு 20—6—71

(செய்திகள்: காலை 6-30, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

334 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-00 நாதாஞ்சலி, 6-10 சைவநற்சிந்தனை, 6-15 கிறிஸ்தவநற்சிந்தனை 6-20 துதிப்பாடல் 7-00 மெல்லிசை, 7-30 திரைகானம், 7-45 இசைவேளை, 8-00 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 தொழிலாளர் கேட்டவை, 1-00 சதங்க இசை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-30 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 ஒடிவிளையாடுபாப்பா, 5-45 கல்விச் சேவை.

இரவு 6-15 புல்லாங்குழல், 6-30 கிராமியப்பாடல், 7-15 பாட்டு, 7-45 ஐ நா. சித்திரம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 பாட்டு, 10-30 செய்தித்தொகுப்பு.

ராணி (யாழ்ப்பாணம்)
காலை 10-30 பி. ப. 2-00 மாலை 5-30
ரவிச்சந்திரன் - லட்சுமி
தங்கவேலு - விஜயஸ்ரீ
நடித்த
ஜீவநாடி

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-30, பி. ப. 2. மாலை 5.30
முத்துராமன் — லக்ஷ்மி,
நாகேஷ் — ராகினி
நடித்த
நவக்கிரகம்

வின்ஸர் — யாழ்ப்பாணம்
காலை 10-30 பி. ப. 2-00 மாலை 5-30
ஜெய்சங்கர், பாரதி,
சுந்தரராஜன், நம்பியார், நாகேஷ்
நடித்த
நீ! கவனி!! காதலி!!!

வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-00, பி. ப. 1-45, மாலை 5-30 மணி
★ சிவாஜி கணேசன்
★ ஜெமினி கணேசன்
★ சாவித்திரி
நடித்த
பாசமலர்

இன்று முதல்
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா
திரைகளில்
★ சிவாஜிகணேசன் ★ வாணிஸ்ரீ
முத்துராமன்-சோ-மனோரமா குமாரி சச்சு
நடித்த
நிறைகுடம்

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி பி. ப 2 30, 5-30
சிவாஜி - பானுமதி
நடித்த
அம்பிகாபதி

நாகம்ஸ் சினிமா
சுன்னாகம்
தினசரி 10-30 காட்சி
ESPIONAGE IN TANGIER
(Serial - Adults only)
தினசரி பி. ப. 2-00, 5-45
சிவாஜி - சரோஜாதேவி
நடித்த
விடிவெள்ளி

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி பி ப 2-30, 6-00
ராஜன் - நிர்மலா
நடித்த
சக்கரம்

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-00, 5-30
வஹிதா ரஹ்மான்
ராஜ்குமார்
நடித்த
நீல் கமால்
(வர்ணம், ஹிந்தி)
இத்துடன் 'பிலிம்பெயர்' பரிசளிப்புவிழா காட்சிகள் கலரில் காண்பிக்கப்படும்.

றீகல் — யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-30
பி. ப. 2-30
முத்துராமன்-கே ஆர் விஜயா
நாகேஷ்
நடித்த
நாணல்
Daily 6-00 p. m
Ursula Andress
in
THE SOUTHERN STAR
(Color)

காஷ்மீர் மக்களுக்கு

கிழக்கு வங்க நிகழ்ச்சிகள் படிப்பினையாக வேண்டுமாம்

பாரதப்பிரதமர் சொல்கிறார்

வங்கதேசத்தை அங்கீகரிக்க எதிர்க்கட்சிகள் வலியுறுத்து

புதுடில்லி, ஜூன் 19

கிழக்கு வங்காளத்தில் நடைபெறும் சம்பவங்கள் காஷ்மீர் மக்களுககு நல்ல படிப்பினையாக இருக்க வேண்டுமென்று இந்திய பிரதமர் திருமதி இந்திரா காந்தி தெரிவித்திருக்கிறார்

கிழக்குப் பாகிஸ்தான் பிரச்னை பற்றிய இந்தியாவின் நிலையையும் அகதிகள் பிரச்னையையும் தென் கிழக்காசிய நாடுகள் தெளிவாகப் புரிந்துகொண்டிருக்கின்றன என்று அந்த நாடுகளுக்குப் போய்த் திரும்பியுள்ள இந்திய கல்வி அமைச்சர் கூறியிருக்கிறார்.

வங்காள தேசத்தை அங்கீகரிக்கவேண்டுமென்று இந்திய ஆட்சிமன்றத்தில் அங்கத்தவர்கள் பலரும் வற்புறுத்தியிருக்கிறார்கள்.

பாரதத்துக்குள் வந்துகுவிந்துள்ள அகதிகள் கிழக்குப் பாகிஸ்தானுக்குத் திரும்பிச் செலவேண்டும். இதற்கான சூழ்நிலையை அங்கு உருவாக்கியாகவேண்டும் என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சர் திரு. ரோஜர்ஸ் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

கிழக்கு வங்காளத்தில் நடந்துவரும் நிகழ்ச்சிகள் காஷ்மீர் மக்களுக்குப் படிப்பினையாக இருக்கவேண்டும் பாரதத்துடன் இணைந்து வாழ்வது என்று காஷ்மீர் மக்கள் எடுத்துள்ள முடிவு மிகச் சரியானதே என்று பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி கூறினார். திருமதி காந்தி காஷ்மீரத்தில் அனந்தநாத் என்ற இடத்தில் மாபெரும் கூட்டமொன்றில் பேசினார்

தேர்தலின் போது ஷேக் முஜிபுர் ரஹ்மானின் கட்சிக்கு மிகப்பெரும்பான்மை பலம் கிடைத்தது. ஆனால் அதிகாரம் அந்த மக்களின் விருப்பப்படி மாற்றப்படவில்லை. கிழக்கு வங்காளத்திலிருந்து லட்சக்கணக்கான அகதிகள் இந்தியாவுக்கு வந்திருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் கிழக்குப் பாகிஸ்தானுக்குத் திரும்பிப் போகத்தான் வேண்டும். அவர்களும் போகத்தான் விரும்புகிறார்கள். இவர்களால் பாரதத்திற்குப் பெரும் பொருளாதார நஷ்டம் ஏற்படுகின்றது. உலக நாடுகள் வெகுமளவில் இவர்களுக்காக உதவியளிக்கவேண்டுமென்று பிரதம மந்திரி கூறினார்

கிழக்கு வங்கப் பிரச்னை குறித்து பாரதம் கொண்டிருக்கும் நிலையையும் அகதிகள் வருகையினால் ஏற்பட்டுள்ள சிக்கல்களையும் தென் கிழக்காசிய நாடுகள் சரியாகப் புரிந்துகொண்டுள்ளன என்று இந்திய கல்வி மந்திரி திரு சித்தார்த்த சங்கர் ராய் கூறினார். திரு. ராய் தென்கிழக்காசிய நாடுகளுக்கு விஜயம் செய்துவிட்டு இப்பொழுது தாயகம் திரும்பியுள்ளார்

இந்தியாவுக்குள் வந்துள்ள அகதிகள் திரும்பிப்போகத்தான்வேண்டும் என்று இவர்கள் திரும்பிப் போவதற்கான சூழ்நிலை அங்கு தோற்றுவித்தாகவேண்டும் என்று அந்த நாடுகளின் தலைவர்கள் கருத்துக் கொண்டிருப்பதாகவும் திரு. ராய் தெரிவித்தார்

வங்காள தேசத்தை அங்கீகரிப்பதுதான் கிழக்குப் பாகிஸ்தானுக்கு இந்தியா செய்யக்கூடிய மிகப் பெரிய உதவியாகும். கிழக்குப் பாகிஸ்தான் மக்கள் தமது போராட்டத்தில் வெற்றி அடைவதற்குஇதுதான் ஒரே வழிஎன திரு அட்டல் பிகாரி வாச்பாய் லோகசபையில் தெரிவித்தார்.

வங்காள தேசத்தை அங்கீகரிக்கக் கோரும் எதிர்க்கட்சியின் பிரேரணை மீது பேசிய திரு அட்டல்பிகாரி வாச்பாய் தொடர்ந்து பேசுகையில் கிழக்குப் பாகிஸ்தான் பிரச்னையை ஐ. நா. வில் இந்தியா கொண்டுவர வேண்டுமென்றும் இதன் மூலம் பாகிஸ்தான் இப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு ஒரு காலக்கெடு கொடுக்க வேண்டுமென்றும் தெரிவித்தார். கிழக்குப் பாகிஸ்தான் பிரச்னை தானாகத் தீருமென மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் உறுப்பினர் ஒருவர் கூறினார்.

பிறநாடுகள் உதவி

கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து இந்தியா வந்துள்ள அகதிகளுக்கென மேலும் பல நாடுகள் உதவி அளித்துள்ளன பின்லாந்து செஞ்சிலுவைச் சங்கம் 4 அம்புலன்ஸ்களை அனுப்பி வந்துள்ளது. நோர்வே அரசாங்கம் 75 லட்சம் ரூபா பெறுமதியான உணவுப் பொருட்களை அளித்துள்ளதாக ஐ நா வுக்கான அகதிகள் ஹைகமிஷனர் ஜெனிவாவில் இன்று தெரிவித்தார்.

ரோஜர்ஸ் கருத்து

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா அளித்துவரும் பொருளாதார உதவி மீண்டும் பழைய நிலைமைக்கு கொண்டுவரப்பட வேண்டுமானால் கிழக்கு வங்காள மக்களுக்கு அவசர உதவிகளைக் கொடுத்துதவ பாகிஸ்தான் அனுமதிக்க வேண்டும்.

இவ்வாறு செனட்டர் எட்வேர்ட் கென்னடிக்கு அமெரிக்க ராஜாங்க அமைச்சர் திரு ரோஜஸ் எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

கிழக்குப் பாகிஸ்தானிய பிரச்னையில் நிக்சன் அரசாங்கம் பாராமுகமாய் இருப்பதைக் கண்டித்து எட்வேர்ட் கென்னடி ராஜாங்க இலாகாவிற்கு கடிதம் அனுப்பியிருந்தார். இவரது கடிதத்திற்கு ராஜாங்க அமைச்சர் அனுப்பிவைத்த கடிதத்திலேயே அமெரிக்க அரசின் இக்கருத்தை தெரிவித்துள்ளார்

கிழக்குப்பாகிஸ்தானில் உள்ள கோடிக்கணக்கான மக்களின் உயிரைக் காப்பாற்றவேண்டுமானால், அமெரிக்கா பாகிஸ்தானுக்கு அளித்துவரும் உதவிகளை நிறுத்தவேண்டும். இதைத் தவிர அமெரிக்காவினால் வேறு எவ்வகையிலும் கிழக்குப்பாகிஸ்தான் மக்களுக்கு உயிரைக் காப்பாற்றமுடியாது என எட்வர்ட் கென்னடி கருத்துத் தெரிவித்துள்ளார்,

கிழக்குப் பாகிஸ்தான் பிரச்னை சம்பந்தமாக அமெரிக்கா கடைப்பிடித்துவரும் போக்கில் மாற்றம்ஏற்பட்டு வருவதையே திரு ரோஜர்ஸின் கருத்து புலப்படுத்துவதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

யாஹ்யா.

மக்களுக்கு அழைப்பு

கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து பிற நாடுகளுக்குச் சென்ற கிழக்குப்பாகிஸ்தானியர் தமது இடங்களுக்குத் திரும்புமாறு, அவர்களுக்குச் சகல பாதுகாப்பும் அளிக்கப்படுமெனவும் பாகிஸ்தான் ஜனாதிபதி யாஹ்யாகான் கேட்டுக்கொண்டுள்ளார்.

‘சீனாவை ஐ. நா. வில் அங்கீகரிக்க வேண்டும்’

செனட்டர் கென்னடி பிரேரணை

வாஷிங்டன், ஜூன் 19

ஐ. நா.வில் பிகிங்கை அங்கத்துவ நாடாக அங்கீகரிக்க வேண்டுமென்ற பிரேரணையை அமெரிக்க செனட்டில் செனட்டர் எட்வர்ட் கென்னடி சமர்ப்பித்துள்ளார். இப்பிரேரணை நிறைவேற்றப்பட்டால் இரு சீனா என்ற கொள்கையை அமெரிக்கா கைவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது 1972-ம்ஆண்டு நடக்கும் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் செனட்டர் எட்வர்ட் கென்னடி ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிடுவார் என்ற செய்தி இப்போது பலமாக அடிபடுகிறது

இந்தியசோஷலிஸ்ட்கட்சிகள் இணைய முடிவு

புதுடில்லி, ஜூன்.19

பிரஜாசோஷலிஸ்ட் கட்சியும் சம்யுக்த சோசலிஸ்ட் கட்சியும் ஒன்றிணைவது பற்றிய நகல் ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது

இருகட்சிகளும் இணைவது பற்றி சில காலமாகப் பேசப்பட்டுவந்தது இ பொழுது பின்தங்கிய வகுப்பினர். மொழி ஆகியவை சம்பந்தமாக இரு கட்சிகளும் ஒத்துழைப்பதற்கு இணக்கம் கண்டுள்ளன.

இது சம்பந்தமான உடன்பாட்டில் இரண்டொரு நாட்கள் இருகட்சித் தலைவர்களும் கைச்சாத்திடலாமென சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சித்தலைவர் திரு. கஸ்தூரிதாகூர் தெரிவித்தார்.

பிரஜா சோஷலிஸ்ட் கட்சியும் சம்யுக்தசோஷலிஸ்ட்கட்சியும் கம்யூனிசத் திற்கு எதிரானவை என மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி கோயம் புத்தூரில் விடுத்த செய்தி ஒன்றில் தெரிவித்துள்ளது.

புற்றுநோய் விஞ்ஞானிக்கு பரிசு

லண்டன், ஜூன்.19

ஒருவகைப் பயங்கரப் புற்று நோய்க்குத் தீர்வு காணும் ஆராய்ச்சியை மேற்கொண்டு மத்திய ஆபிரிக்கா ஊடாக 10,000 மைல்கள் வரை பிரயாணம் செய்த பிரிட்டிஷ் விஞ்ஞானி ஒருவருக்கு மேற்கு ஜெர்மனியின் மிக உயர்ந்த விஞ்ஞானக் கௌரவப் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் வைத்திய ஆராய்ச்சிக் கவுன்சிலைச் சேர்ந்த பேராசிரியர் டெனிஸ் பேர்கிட் என்பவர்தான் அவர் பிரபல சுவீடன் விஞ்ஞானியாகிய டாக்டர் வல்டென்ஸ்டோமுக்கும் பேராசிரியர் டெனிஸ் பேர்கிட்டுக்கும் கூட்டாகச் சேர்த்து போல் எர்லிச் எனப்படும் தங்க விருது வழங்கப்பட்டுள்ளது.

பேராசிரியர் பேர்கிட் உகண்டாவின் தலைநகரான கம்பாலிலுள்ள வைத்தியசாலை ஒன்றில் ரண சிகிச்சை நிபுணராகப் பணி புரிந்து வந்தார். அச்சமயம் ஆபிரிக்கச் சிறுவர்களிடம் புதிரான புற்றுநோய் பரவி வருவதை அறிந்தார். இதனையடுத்து இக் கொடிய நோயைக் குணப்படுத்தும் ஆராய்ச்சியில் ஈடுபட்டார். இந்த ஆராய்ச்சி காரணமாக மத்திய ஆபிரிக்கக் கண்டம் முழுவதும் சுற்றியலைந்து ஈற்றில் இவ்வியாதியைக் குணப்படுத்தும் புதிய மருந்தைக் கண்டு பிடித்தார்.

தாய்மொழி கல்விபற்றி மு. வ.

சிதம்பரம், ஜூன். 19

“தாய் மொழியில் கல்வி கற்றுக்கொடுப்பதுதான் சிறந்தது. தமிழ்நாட்டில் தமிழ் மொழியில் கல்வி கற்பிக்க வேண்டும் தாய் மொழிக்கல்வி மூலமாகத்தான் சிறந்த விஞ்ஞானிகளை உருவாக்கமுடியும்” இவ்வாறு மதுரை பல்கலைக்கழக துணைவேந்தர் மு. வரதராசனார், சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அகில இந்திய பல்கலைக்கழக தமிழாசிரியர் மாநாட்டைத் தொடக்கிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் ஆங்கிலம் தொடர்பு மொழியாக இருக்கவேண்டுமென்றும் இதுபாடமொழியாக இருப்பதை ஏற்கமுடியாதெனவும் குறிப்பிட்டார். இரண்டு நாட்களாக நடைபெற்ற இம்மாநாட்டில் 200 பிரதிநிதிகள் கலந்துகொண்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கோவில் எரிந்தது

திண்டிவனம், ஜூன் 19

திண்டிவனத்திற்கு அண்மையிலுள்ள வஜ்ரகிரி வடிவேலன் கோவிலில் திடீரெனத் தீப்பிடித்துக் கொண்டதினால் எரிந்து அழிந்தது. பெருங்காற்று வீசியதினால் இக் கோவிலுக்கு அருகில் இருந்த ஆச்சிரமத்திலும் தீப் பற்றிக் கொண்டது தீப்பிடித்ததற்கான காரணம் இது வரை கண்டுபிடிக்கப்படவில்லை. பொலிசார் இது பற்றி விசாரணை நடாத்துகின்றனர்.

யாழ். ரயில் நிலையத்திற்கு மேலாகப்பாலம்

புகையிரதப் பகுதி சிபார்சு

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திற்கு மேலாக ஸ்ரான்லி வீதியையும், ஆஸ்பத்திரி வீதியையும் இணைக்கும் பாலத்தை அமைப்பதற்கு புகையிரத பகுதியினர் சிபார்சு செய்துள்ளனர்.

இப்பாலத்தை நிறுவுவதற்கான மாதிரிப்படங்கள் தயாரிக்கப்பட்டு விட்டதாகவும், விரைவில் இப்பாலம் அமைப்பதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்படுமென்றும் மேயர் திரு அல்பிரட் துரையப்பா நேற்று தெரிவித்தார்.

அத்தியடிப்பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கை நிறைவேறப் போகிறதென்றும், இப்பாலம் அமைப்பதன்மூலம் போக்குவரத்து கஷ்டம் நீங்குமென்றும் 14ம் வட்டார உறுப்பினர் திரு ரி. வே. இராஜரத்தினம் தெரிவித்தார். இப்பாலம் மீண்டும் நிறுவப்பட்டால் நல்லூர் உற்சவகாலத்தில் புகையிரதம் மூலம் வரும் பக்தர்கள் சுலபமாக கோவிலுக்குச் செல்லலாம் என்று அவர் தெரிவித்தார்.

பல வருடங்களாக இருந்துவந்த இப்பாலம் புதிய புகையிரதநிலையம் நிறுவப்பட்டபோது அகற்றப்பட்டது. இதன்பின் மக்கள் போக்குவரத்தின் போது மிகவும் கஷ்டப்பட்டனர்.

கொழும்பில் நடந்த

ஸ்ரீ ராமகான சபை வைபவம்

ஸ்ரீராமசந்திர மூர்த்தியின் அவதாரம், தர்மத்தை கடைப்பிடித்துக் காண்பிப்பதற்காக ஏற்பட்ட பகவத் அவதாரமாகும். அவரை சத்ய சந்தர் என்றும் ஜனங்களின் நன்மையிலேயே ஈடுபடுபவர் என்றும் நாரத மகரிஷி கொண்டாடியுள்ளார். அவரது அவதார தின மகோற்சவத்தை கொழும்பில் ஸ்ரீ ராமகான சபையினர் சென்ற வருடங்களைப் போலவே விமரிசையாகக் கொண்டாடுவதை அறிந்து மகிழ்ச்சியடைகிறோம். ஆஸ்திகர்கள் இவ்வைபவத்தில் கலந்துகொண்டு எல்லா மங்களங்களையும் அடைவார்களாக'

என்றிவ்வாறு ஸ்ரீகாஞ்சிகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகள் அனுப்பிவைத்துள்ள ஆசிச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார். ஸ்ரீ சிருங்கேரி சுவாமிகள் அனுப்பிய ஆசிச்செய்தியும் ஸ்ரீராமகான சபையினர் வெளியிட்டுள்ள விசேஷ மலரில் வெளியாகியுள்ளது.

சென்ற ஆண்டு நிர்வாகத்தில் சபைக்கட்டிடம் திருத்தி புதுப்பிக்கப்பட்டுள்ளதைக் குறிப்பிட்டு வாலிபர்கள் சபை காரியங்களில் அதிகமாக ஈடுபட்டு, நூல்நிலையத்தை விஸ்தரித்தும் சங்கீத வகுப்புகளை நடத்தியும், சந்நியாவந்தனம் முதலிய சமய காரியங்களைச் சரியாகச் செய்வதற்கும் அவற்றின் அர்த்தங்களையும் தத்துவங்களையும் மகிமைகளையும் நன்கு தெரிந்துகொள்வதற்கும் ஏற்பாடுகள் செய்யலாமென்றும் பழைய தலைவர் திரு. கி. லக்ஷ்மண ஐயர் யோசனை கூறியிருக்கிறார். பக்தியை வளர்க்கக்கூடிய கட்டுரைகளும் பயனுள்ள பல விஷயங்களும் இம்மலரில் அடங்கியுள்ளன.

ஸ்ரீராம நவமி உற்சவம் இம்முறை கப்பித்தாவத்தையிலுள்ள கதிர்காம தொண்டர் சபை மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. காலையில் ஸ்ரீ பால செல்வ விநாயகரை, சபைத்தலைவர் முதலியோர் சென்று வழிபட்ட பின், திரு பாபு நடராஜ் 'உஞ்சவிருத்தி' பஜனை வழக்கம்போல் நடத்தினர். சமஸ்கிருதம், தேவார இசைப்போட்டிகள் முதலியவற்றில் வெற்றிபெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. திருமதி மீனாகாதேவன் தலைமையில் பல பெண்மணிகள் சேர்ந்து பஞ்சரத்ன கீர்த்தனைகளை பக்தியுடன் இனிமையாகப் பாடினர். புதுவருடத்துக்கு திரு எஸ். பாலசுப்பிரமணிய ஐயர் தலைவராகவும், திரு. பி. சண்முகரத்னசர்மா உபதலைவராகவும், திரு. பாபு நடராஜ் காரியதரிசியாகவும் போட்டியின்றி தெரிவுசெய்யப்பட்டனர்.

சபையின் சந்தியாவந்தன, சமஸ்கிருத வகுப்புகளை நடத்தவும் இளைஞர்களிடையே பக்தியையும், தெய்வநம்பிக்கையையும் வளர்க்கவும், கூடிய சமூக சேவைகளைச் செய்யவும், ஸ்ரீ ராமகான சபை அதிக கவனம் செலுத்துமென்றும் புதுத் தலைவர் தெரிவித்தார்.

''மீனவர் காப்புறுதிசெய்தல் மிகவும் அவசியமானது''

மாவிட்டபுரம், சனி

'மீனவர் ஒவ்வொருவரும் தம்மை காப்புறுதி செய்யவேண்டும். ஆழ்கடலுக்குச் சென்று தொழிலில் ஈடுபட்டு உயிர்நீக்கும் மீனவரின் குடும்பத்தினருக்கு உதவியளிக்குமுகமாகவே மீனவர் காப்புறுதித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது'.

இவ்வாறு கூட்டுறவுப் பகுதி தலைமைக்காரியாலய பரிசோதகர் திரு பி. கோவிந்தசாமி மயிலிட்டி ஊறணி புனிதஅந்தோனியார் மீன்பிடிச்சங்க கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

கடற்றொழில் கூட்டுறவுப் பகுதி பருத்தித்துறை பரிசோதகர் திரு சச்சிதானந்தம் பேசுகையில் மீன்பிடித் தொழிலாளர் மிகவும் கஷ்டப்பட்டு கரைசேர்க்கும் கடல்படு திரவியங்களினால் முதலாளிமாரே அதிகவருமானம் பெறுகிறார்கள். ஏழைத் தொழிலாள மீனவர் கஷ்டப்படும் அளவுக்குத்தக்க பயனைப்பெற முடியாமல் இருக்கிறது. கூட்டுறவு முறையில் மீன் விற்பனை மேற்கொள்ளுவதன் மூலம் தொழிலாளர் பயன்பெற முடியும் என்றார். திரு நேசதுரை தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் வேறுபலரும் பேசினர்.

யாழ்ப்பாணத்தில் குற்றங்கள் குறைந்துள்ளன

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணத்தில் பாரதூரமான குற்றங்களும், குடிபோதையில் நடைபெறும் சண்டைகளும் மிகவும் குறைந்துள்ளதாக வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

ஊரடங்குச்சட்டம் அமுலுக்கு வந்ததிலிருந்து களவுகள் நடைபெறுவது குறைந்துள்ளதென்றும் அவர் சொன்னார். ஊரடங்கு சட்டத்தை மீறுவோர் கைது செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்படுவர் என்று பொலிஸ் அதிபர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வடபகுதியிலுள்ள பிரதான கல்லூரிகளைச் சுற்றி பொலிசார் அடிக்கடி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் பொலிஸ் அதிபர் தெரிவித்தார்.

அதிபராக நியமனம்

குருநகர், சனி

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றிய திரு வி பொன்னுத்துரை வேலணை மத்திய கல்லூரிக்கு அதிபராக நியமனம் பெற்றுள்ளார்

'சீரிய வாழ்வுக்கு கல்வி அவசியம்'

சுழிபுரம், சனி

ஒழுங்கான வாழ்வு வாழ மாணவர்களுக்கு கல்வி இன்றியமையாதது. இம்மாணவர்கள் சமயவரம்பிற்கு ஏற்ப ஒழுகி நல்ல நூல்களின் துணை கொண்டு வாழ்வைக் கட்டி எழுப்ப முன்வரவேண்டும். இதற்கு வள்ளுவர் காட்டிய வழியைப் பின்பற்ற வேண்டும்'

இவ்வாறு மானிப்பாய் மெமோரியல் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற வள்ளுவர் விழாவின் போது பேசுகையில் பண்டிதர் ம. இராசகுரு குறிப்பிட்டார். அதிபர் எஸ். கைலாயநாதன் தலைமையில் இவ்விழா நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

அகில இலங்கை லஞ்ச ஊழல் ஒழிப்பு இயக்கம்

கோட்டை, சனி

லஞ்ச ஊழல் விசாரணைக் கமிஷனர் இலாகா அகில இலங்கை லஞ்ச ஊழல் ஒழிப்பு இயக்கமொன்றை ஆரம்பிப்பதற்குத் தீர்மானித்துள்ளது.

மேற்படி இலாகாவின் வேலைகளைத் துரிதப்படுத்தவும் சுருக்கமாகவுமே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

பொதுமக்களுக்கும் அரசாங்க ஊழியருக்கும் லஞ்ச ஊழலின் தீங்கை போதித்து அவர்களை அதைமேற்கொள்ளாது தடுப்பதே இந்த இயக்கத்தின் குறிக்கோளாகும்.

வானொலியில் அந்தோனியார் விழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

இலங்கை வானொலி தேசிய சேவை தமிழ்ப் பிரிவில் பாஷையூர் அந்தோனியார் கோவில் உற்சவ இறுதி நாள் நிகழ்ச்சிகள் நேற்றுப் பிற்பகல் 5 மணிக்கு ஒலிபரப்பப்பட்டன. அரை மணித்தியாலத்திற்கு இந்நிகழ்ச்சி இடம் பெற்றது.

தொழிலாளருக்குப்பெரிதும் உதவும் தொழிற் சங்கங்கள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

தொழிலாளிகளை வழிநடாத்துவதற்கும் அவர்களின் பிரச்னைகளை தீர்ப்பதற்கும் முதலாளிகளின் சுரண்டல் தனத்தை முறியடிக்கவும் தொழிற்சங்கம் நல்ல உதவியாக அமைந்துள்ளது. தொழிற் சங்கங்கள்தான் தொழிலாளரின் உரிமைக்காகப் போராட வேண்டும்.

இவ்வாறு ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்க பொதுச் செயலாளர். திரு பொன் குமாரசாமி யாழ் தொழிற்சங்கப் பிரதிநிதிகளின் விசேட கூட்டத்தில் கலந்துரையாற்றுகையில் கூறினார்.

இலங்கைத் தொழிலாளர் சம்மேளன வடபிரதேசத் தலைவர் ஆ. வைத்திலிங்கம் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில்;

முன்பு தொழிலாளரின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு வன்முறைகளை தொழிலாளர்கள் கையாண்டனர், வன்முறைச் செயல்களால் பிரச்சனைகளைத் தீர்க்க முடியாது என்பதைச் சென்றகாலம் எடுத்துக் காட்டுகிறது' ஆகவே தொழிலாளர் தமது பிரச்சினைகளை தீர்க்க வேண்டுமானால் தொழிற்சங்கங்களை ஸ்தாபித்து அதன்மூலம் பிரச்னைகளைத் தீர்க்க வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் இதுகாலம் வரை ஒரு தொழிற் சங்கம் நல்ல முறையில் இயங்கவில்லை. ஆனால் தற்போது தொழிற் சங்கங்களில் தொழிலாளிகள் சேர்ந்துள்ளதால் தொழிலாளர் பிரச்னை சுமுகமாகத் தீர்க்கப்படுகிறது. ஆகவே தொழிலாளர்கள் தொழிற் சங்கங்களைப் பலப்படுத்தி தமது பிரச்னைக்குத் தீர்வு காண வேண்டியதவசியம் என்றார்.

திரு ஆ. வைத்திலிங்கம் தமது தலைமையுரையில் முதலாளிகள் தொழிலாளியின் பிரச்னைகளைத் தீர்த்துவைப்பதன்மூலம் தொழில் நிலையத்தை வளர்க்கலாம். ஆகவே தொழிலாளர் பிரச்னைகளைத் தீர்த்து வைக்கவேண்டும் என்றார்.

திரு ரி. எம். பரமானந்தம் எஸ் நடராசா, என் விசயானந்தன், எஸ். செல்வராசா உட்பட மற்றும் பலர் உரையாற்றினர். [மா. நி]

'அரசாங்க வைத்திய நிபுணர்

வெளியே சிகிச்சை அளிப்பதை நிறுத்தவேண்டும்'

யாழ்ப்பாணம், ஞாயிறு

'அரசாங்க ஆஸ்பத்திரி விசேஷ வைத்திய நிபுணர்கள் வெளியில் சிகிச்சையளிப்பதை நிறுத்தி ஆஸ்பத்திரியில் நோயாளிகளிடம் ஒரளவு கட்டணம் பெற்று சிகிச்சை அளிக்க அனுமதிக்க வேண்டும்' என்று கோரும் தீர்மானம் ஒன்றை ஆஸ்பத்திரிக் கமிட்டி நிறைவேற்றியுள்ளது.

மேற்படி சபையின் கூட்டம் யாழ். ஆஸ்பத்திரியில் நடைபெற்ற சமயம் ஆஸ்பத்திரிக் கமிட்டி நிர்வாகக் குழு உறுப்பினரான ச. இராசையாவால் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்ட இத் தீர்மானத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தனியார்துறை ஆஸ்பத்திரியில் அரசாங்க விசேஷ டாக்டர்கள் சட்டப்படி அழைக்கப்பட்டு வெளி நோயாளிகளை பார்வையிட்டு பின் ஆஸ்பத்திரியில் வைத்திய சிகிச்சை நடைபெறுவதால் நேரடியாக வைத்தியம் செய்யும் ஏனைய நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். எனவே வெளியே சிகிச்சை செய்யப்படுவது நிறுத்தப்பட்டு ஆஸ்பத்திரியில் விரும்பியோர் கட்டணம் கொடுத்து பார்வையிட அனுமதிக்கப்படவேண்டும்.

மற்றும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

0 ஆஸ்பத்திரியின் வேலைக்கு தொழிலாளர்களை எடுக்கும் விண்ணப்பம், நேரடி பரீட்சையின் பொழுது ஆஸ்பத்திரி நிர்வாக உறுப்பினர்களில் இருவர் சமூகமளிக்கப்பட வேண்டும்.

0 சகல ஊழியர்களும் வேலை செய்யும் பொழுது கங்காணிமார்கள் தாதிகள் தொழிலாளர்களுக்கு இலக்கமிட்டு வேலை செய்வதற்கு அனுமதித்தல் வேண்டும். (மா. நி)

பொலிஸார் கைப்பற்றினர்

மாவிட்டபுரம், சனி

மயிலிட்டி கடற்கரையில் வைத்து இந்தியாவுக்கு கடத்திச்செல்ல முயன்றதாகக் கருதப்படும் 6 மூடை கராம்பு சாதிக்காய் ஆகியனவற்றை காங்கேசன்துறை பொலிஸார் கைப்பற்றினார்கள்.

காங்கேசன்துறை பொலிசுக்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில் இன்ஸ்பெக்டர் திரு. எஸ். தேவசகாயம் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி மயிலிட்டி கரையில் வைத்து இப்பொருட்களைக் கைப்பற்றினார்கள்

இது சம்பந்தமாக இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை. பொருட்கள் சுங்கப் பகுதியினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மருந்து வகைகள் வந்துசேர்ந்தன

சுழிபுரம், சனி

சுழிபுரம் கிராம சபை ஆயுள்வேத வைத்தியசாலைக்குவேண்டிய மருந்துவகைகள் மகாரகம ஆயுள்வேத மருந்துச்சாலையிலிருந்து வந்துசேர்ந்துள்ளன. கடந்த மூன்றுமாதங்களுக்குமேலாக மருந்துவகைகளுக்குப்பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டிருந்ததினால் பல நோயாளர்கள் கஷ்டப்பட்டனர்.

கதவுகள் திறந்தன

சுன்னாகம், சனி

சுன்னாகம் பிள்ளையார் கோவில் கதவுகள் சகலருக்கும் திறந்துவிடப்பட்டுள்ளன. ஆயிரத்து எட்டு சங்கு அபிஷேகம், அன்னதானம் ஆகியவற்றை அடுத்து நேற்று சுவாமி வீதிவலம் வந்தார்.

……

இவர்களுக்கு நியமனம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

பலாலி கனிஷ்ட பலகலைக் கழகத்தில் விவசாயத்துறையில் டிப்புளோமா பட்டம் பெற்ற மாணவர்களுக்கு விவசாய ஆசிரியர்களாக நியமனம் வழங்கப்படவுள்ளதாகத் தெரிகிறது. இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனவாம்.

அஷ்ட திக்கு

ஆங்கிலத்துக்குத் தடை

ஆங்கிலம் அரசாங்கமொழி அல்லாததால் அதை உபயோகிப்பதை முற்றிலுமாக உடன் நிறுத்திவிடவேண்டுமென்று இந்தியாவில் உத்தர பிரதேச அரசாங்க முதல் மந்திரி கமலாபதிதிரிபாதி ஓர் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்.

அரசாங்க அலுவலகங்களிலும் கடிதப்போக்குவரத்துகளிலும் ஆங்கிலத்தைப் பயன் படுத்தக் கூடாதென்றும் இதை மீறுவது ஒழுங்கீனமாகுமென்றும், அவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படுமென்றும், அரசாங்கம் எச்சரித்திருக்கிறது

தலைமை காரியதரிசி இந்த உத்தரவைக் கண்டிப்பாகப் பின்பற்றவேண்டுமென்று எல்லா இலாகாக்களுக்கும் சுற்றுத்தரவு பிறப்பித்திருக்கிறார் 1968ம் வருடம் ஜனவரி 26ந்திகதி இந்தியே அரசாங்கக் காரியங்களுக்கெல்லாம் பயன்படுத்தப்படவேண்டுமென்ற உத்தரவு அமுலுக்கு வந்தது. என்றாலும் சில அதிகாரிகள் இந்தியைப் பயன் படுத்துவதில்லை என்று சொல்லப்படுகின்றது

இலங்கையிலே சிங்களம் அரசாங்க மொழியாக இருக்குமென்றும் தமிழ்மொழி பெயர்ப்புகள் சேர்க்கப்படவேண்டுமென்றும் அரசியல் அமைப்புச் சபையில் கொண்டுவரப்பட்ட அடிப்படைத் தீர்மானம் ஒன்று கூறுகிறது. ஆங்கில உபயோகத்திற்குச் சட்டத்தில் இடமில்லை. ஆங்கிலத்தை உபயோகிக்கக் கூடாதென்று இங்கும் உத்தரவு பிறக்குமா? பார்லிமென்டிலும் செனட் சபையிலும் ஆங்கிலத்தில் பேசமுடியுமா?

0 0 0

ஐ. நா. அதிகாரிக்கு விபத்து

ஐக்கியநாடுகள் ஸ்தாபனத்தின் உதவி பொதுக்காரியதரிசி டாக்டர் ரால்ப் புன்சே ஒரு நியூயோர்க் ஆஸ்பத்திரியில் ஒரு வாரகாலமாக மயக்கம் தெளியாமல் படுத்துக்கிடக்கிறார். அவர் தமது வீட்டில் கீழே விழுந்ததிலிருந்து மூர்ச்சையாகியுள்ளார். அவர் குணமடைவாரா என்பதுபற்றி கவலை தெரிவிக்கப்படுகிறது.

ஐ. நா. சபையில் உதவிக் காரியதரிசியாக பதவி வகிக்கும் புன்சே, அமெரிக்காவைச் சேர்ந்த நீக்கிரோவராவர். மிகத்திறமையான நிர்வாகி என்று புகழ்பெற்றவர் பார்த்தால் அவரை நீக்ரோவரென்று யாரும் சொல்லமுடியாது.

0 0 0

கிளி, குருவி

சென்னையிலே தெரு ஓரங்களில் கிளிசோதிடம், குருவிசோதிடம் முதலியவை கூறிப் பிழைப்பவர்கள் சுமார் இரண்டாயிரம் ஏழைகள் இருக்கின்றனர். சின்னக் கூண்டிலே கிளிகள், குருவிகள் இவற்றை அடைத்து வைத்து இம்சைக்குள்ளாக்குவதாக அவர்கள்மீது மிருக இம்சை தடுப்புச்சங்கத்தார் நடவடிக்கைஎடுத்து வருகின்றனர். ஒரு 'சோதிடர்' ஒரு சிறிய பிராணியை அப்படி அடைத்துவைத்ததாகக் குற்றம்சாட்டப்பெற்றார். அவரைக்குற்றவாளி எனக் கண்டநீதவான் அவரது ஏழ்மையைக்கருதி, அவரைக் கடுமையாக எச்சரித்து விடுதலை செய்தார். நம் இலங்கையிலும் கிளி.குருவி 'சோதிடர்கள்' சிலர் உள்ளனர் அந்தக் கிளிகளுக்கும், குருவிகளுக்கும் எப்போது விமோசனமோ?

0 0

மாம்பழங்கள்

மாம்பழங்களுள் "ராஜா" மாம்பழமா! ஆனால் அதில் எது மிகருசியானது? ஒவ்வொருவரும் வெவ்வேறு வகையைச் சொல்லலாம். இந்தியாவிலே பலபல ரகங்களுள்ளன. ராஜ்யத்துக்கு ராஜ்யம் இது வேறுபடுகிறது. ஒவ்வொரு பகுதியினரும் தங்கள் பகுதியிலுள்ள பழம் தான் மிக இனிமையானதென்று கூறுவர். இந்திய லோகசபையிலே பல எம்.பிமார்கள் தங்கள் தங்கள் பிரதேச பழங்கள் தான் மிக மேலானதென்றும், அதை அபிவிருத்தி செய்ய அரசாங்க ஆதரவு வேண்டும் என்றும் போட்டி போட்டுக் கொண்டு கூறினர். மாம்பழ உற்பத்தி இந்தியாவில் குறைவதாகவும், அரசாங்க அலட்சியமே இதற்குக் காரணமென்றும் ஒரு மெம்பர் கூறியதை விவசாய அமைச்சர் மறுத்தார். நமது யாழ்ப்பாண மாம்பழத்தை இந்தியாவில் உள்ளவர்கள் சாப்பிட்டிருக்கமாட்டார்கள். சாப்பிட்டுப்பார்த்தால் இதற்குத்தான் முதல் பரிசு கிடைக்குமல்லவா? இங்கு இப்பழங்களை ஏழைகளும் வாங்கி உண்ணும்படி ஏதும் செய்யமுடியாதா?

பஸ் பயணம்

இலங்கையில் பஸ்ஸுகளில் புகைப்பதற்குப்போட்டுள்ளதடை சென்ற 15ந் திகதி முதல் அமுலுக்கு வந்ததெனினும், பஸ்ஸுகள் பலவும் கரிய புகைமண்டலங்களை எழுப்பி தெருவில் செல்வோருக்கு மிகவும் சங்கடம் விளைவிக்கின்றன.

பஸ்ஸுகளில் புகைப்பதை நிறுத்தியதை பிரயாணிகளில் பலரும் வரவேற்கின்றார்கள். காலை வேளைகளில் அநேகமாக எல்லாபஸ்ஸுகளிலும் கூட்டம் அதிகமாகவுள்ளதுடன் பிரயாணிகள் வெகுநேரம் காத்துக்கிடக்க வேண்டியுள்ளது. பல பஸ்ஸ்டாண்டுகளில் இ.போ.ச. சிப்பந்திகள் இருந்து 'கியூ' வரிசைகளை ஒழுங்கு செய்வதால் பஸ்ஸுகளில் மக்கள் ஏறியது அதிக ஒழுங்காகியுள்ளது. ஆனால் பல இடங்களில் இந்த ஒழுங்கு இல்லை.

பஸ்ஸுக்குள்ளாக பெண்களுக்கென இடங்கள் ஒதுக்கப்பட்டிருப்பதாக எழுதி இருக்கிறார்கள். ஆனால் அந்த இடங்களில் ஆண்களே பெருவாரியாக அமர்ந்துள்ளனர். பெண் பிரயாணிகள் நின்று கொண்டு தள்ளுமுள்ளுகளுக்கு அவதிப்படவேண்டியுள்ளது. பஸ் கண்டக்டர்கள் இதை கவனித்து பெண்கள் பிந்திவந்தாலும் அவர்களுக்குரிய இடங்களில் அமர்ந்துள்ள ஆண்களை எழுந்திருக்கச்சொல்லி அங்கு பெண்களை அமர்த்தவேண்டும். அப்போதுதான் பெண் பிரயாணிகளுக்கு இம்சை குறையும் பெண்களைக்கண்டால் ஆண்கள் எழுந்து இடம் கொடுக்கும் பண்பு இப்போது குறைந்துவிட்டது. அவர்களுக்கு ஒதுக்கியுள்ள இடங்களையாவது 'ஆக்கிரமிக்காமல்' இருக்கச் செய்யவேண்டாமா? பஸ்ஸின் முன்பக்க வாசல் மூலம் பெண்கள் பஸ்ஸில் ஏறவும் இறங்கவும் ஒழுங்கு செய்வது மேலாகுமென்று தமிழகத்தில் யோசனைகூறப்படுகின்றது. எப்படியும் பஸ்ஸில் ஏறுவதிலும் பிரயாணம் செய்வதிலும் சிறப்பாகப்பெண்களுக்கு அதிக வசதிகள் செய்வதுவிரும்பத்தக்கதாகும்.

——

மத்தியகுழு உறுப்பினராகத் தெரிவு

மாவிட்டபுரம், சனி

அகில இலங்கை இஸ்லாமிய சோஷலிச முன்னணியின் மத்திய குழு உறுப்பினர்களாக இருவர் யாழ்ப்பாணத்தில் இருந்து தெரிவாகியுள்ளனர்.

மேற்படி முன்னணியின் தலைமைக்குழுவின் மத்திய சபை உறுப்பினர்களாக சோஷலிச முன்னணியின் யாழ். கிளைத் தலைவரான எஸ். எம். மீரான் சாகிப், எம் சி. ரகீம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இன்றைய பலன்

ஆனி மாதம் 6-ந் திகதி

(20-6-71)

மேஷம்- சுறுசுறுப்புக் குன்றும். உமது சொந்த வாழ்க்கையில் மற்றவர்கள் தலையிடுவார்கள். குடும்பத்தில் சிறியபூசல்கள் தோன்றி மறையும்

ரிஷபம்: கனிவான நினைவுகள் தலைதூக்கும். காதல் விவகாரங்களுக்கும் இடம் உண்டு. இனிதான பேச்சின் மூலம் எல்லோரையும் வசீகரிப்பீர்கள்.

மிதுனம்: எதிலும் அலட்சியமனப்பான்மை தோன்றக்கூடும். சகோதரவழியால் சஞ்சலத்திற்கு இடமுண்டு, மௌனம் நன்று

கடகம். இயந்திரங்களுடன் பழகுபவர்களுக்கு இன்று சிறப்பான தினம். கல்வியிலும் நல்ல அபிவிருத்தி தென்படுகின்றது.

சிம்மம்- தெளிந்தமனம் தெய்வசிந்தை தேடியது கிடைக்கும். அமைதியுடன் ஆனந்தவாழ்வும் உண்டு.

கன்னி: துன்பத்தின் நிழலாட்டம் உங்களைத் தொடரும். இன்று அதிக பேச்சைத் தவிர்த்துக்கொள்ளவும். வரவிலும் தடை உண்டு.

துலாம்: இல்லத்தில்இன்று இனிமையான சம்பவங்கள் இடம்பெறும். வாக்குவன்மையின் மூலம் பெரிய மனிதர்களின் ஆதரவும் கிடைக்கும்.

விருச்சிகம்- எண்ணியதில் தடைகள் தோன்றும். ஏமாற்றம் தாக்கும். நண்பர்கள் காலை வாரிவிடக்கூடும், நிதானம் வேண்டும்.

தனுசு: உழைப்பின் வெற்றிக்கு இன்று உறுதியளிக்கப்படுகின்றது. அதிக பிரயாசையின் மூலம் ஆபத்தைத் தேடுவீர்கள்.

மகரம்: உற்சாகமான நாளை ஆரம்பிப்பீர்கள். தொழில்துறையில் முன்னேற்றமான சம்பவங்கள் இடம்பெறும். சிலருக்கு இடமாற்றமும் ஏற்படலாம்.

கும்பம்: வேண்டிய அளவிற்கு இன்று வெள்ளிப் பணம் துள்ளும், புதிய நண்பர்களையும் தேடிக் கொள்வீர்கள். சகல துறைகளிலும் முன்னேற்றமுண்டு.

மீனம்: கடன்பட்டார் நெஞ்சம்போலக் கலங்கி நிற்பீர்கள். விடயங்கள் அனைத்தும் மூடுபனியாகவே இருக்கும் இன்று சிக்கல் நிறைந்ததினம்.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

மானிப்பாய் புனித அந்தோனியார் தேவாலய திருவிழா இம்மாதம் 22ம்திகதி நடைபெறுகிறது இதற்கு முதல்நாளானநாளை யாழ்ப்பாணம் துணைஆயர் எல் ஆர் அன்ரனி ஆண்டகை உறுதிபூசுதல் என்னும் திருவருட் சாதனம் வழங்கும் முக்கிய நிகழ்ச்சி இடம் பெறுகிறது வடபகுதியின் நாலு பக்கத்தைச் சேர்ந்த கத்தோலிக்க மக்களின் புனித வைபவம் இது.

மானிப்பாயின் பதுவைப் புனிதர்

- ச. வில்பிறெட் -

(மறைவாசிரியர்)

மெய்மறையின் உண்மைக்காக உயிர்துறந்தோர்பலர், மணிபுரிந்தோர் பலர், பாடுபட்டோர் பலர், உத்தமர்களாய் வாழ்ந்தோர் இன்னும் பலர். இவர்களை தாய்த் திருச்சபை எமக்கு அறிமுகப்படுத்தி, புனிதர்பட்டமளித்துவருகின்றது இவர்களுக்கு நாம் மதிப்பும், மரியாதையும் செலுத்தவேண்டும். இவர்களின் வாழ்வைப் பின்பற்றி இறைவனை அடையவேண்டும் என்றும் பணிக்கின்றது. இவர்களின் மன்றாட்டால் நாம் இறைவனடி சேரமுடியும், இறைவனை நெருங்கமுடியும், எண்ணற்ற நன்மைகளைப் பெறமுடியும் என்று போதிக்கின்றது இவர்களில் புனித அந்தோனியாரும் ஒருவர்.

இப்புனிதர் மனிதனாய், இவ்வுலகில் வாழ்ந்தார் அன்று. புனிதராய்வானவீட்டில் வாழ்கின்றார் இன்று. அவர், அன்றும் இன்றும் எண்ணற்ற புதுமைகளால் மக்களின் துன்பம் நீக்கி, இடர்களைந்து, இன்பம் அளித்து இகபரம் நல்கவழி செய்து வருகிறார். எனவே மக்கள் இவரைக்கோடி அற்புதர், யேசுவை ஏந்தியவர், பதுவை விரத்தர் என்றெல்லாம் புகழ்ந்துகொண்டாடுகின்றனர். அவர்க்கு ஆலயம் எழுப்பி அனுதினம்வணங்கி வருகின்றனர். உலகின் பல பாகங்களில், பலநாடுகளில் எழுப்பப்பட்ட ஆலயங்களுள் மானிப்பாயில் எழுந்தவரும் ஆலயமும் ஒன்று

மானிப்பாய் தந்த மாணிக்கம், நல்லூர் சுவாமிஞானப்பிரகாசரை அறியாதார் இலர். எழுத்துலகில் அவரைப் படியாதார் இலர். இவர் நல்லூரில் பணி புரிந்த போது அநேக கோவில்கள் கட்டினார். தான்பிறந்த இடமான மானிப்பாயில் ஆலயம் ஒன்று எழுப்ப, நெடுநாட்களாய் ஆவல்கொண்டார். திரு தம்பிராசா அவர்களின் குடும்பம் ஞானநீராடல் பெற்றபோது இந்த ஆசை பூர்த்தியாகியது. 1946-ம் வருடம் பங்குனி மாதம் 19ம் திகதி இதற்கான ஒரிடத்தை தெரிந்தெடுத்தார். 1946ம் ஆண்டு ஆனி மாத கடைசி வாரத்தில் ஆலயவேலை முடிவடைந்தது. சிறிய ஆலயம் ஆலயமாக அது அமைக்கப்பட்டு ஆடம்பர பலிப்பூசையுடன் வழிபாட்டுக்கெனத் திறந்து வைக்கப்பட்டது. காலன் என்ற கயவன் அவரை அழைத்தான். 1947-ம் வருடம் தைத் திங்கள் 22-ம் நாள் அவரது பூவுடல் பூமியில் புதைக்கப்பட்டது. அவரைத் தொடர்ந்து சுவாமி பிலிப்



அவர்கள் நல்லூரில் இருந்து கொண்டு இம் மானிப்பாய் ஆலயத்தையும் கண்காணித்து வந்தார். ஆரம்பத்தில் நேர்த்தி செலுத்துதல் மெழுகுதிரி கொளுத்துதல் போன்றவைகள் நடைபெற்றன இவர்பின்வந்த சுவாமி ஏ. ஜே. இராசநாயகம் அடிகளார் ஒவ்வொரு செவ்வாய் தோறும் திருப்பலி ஒப்புக்கொடுத்து பக்தர்களை ஆசீர்வதித்து வந்தார். புனித அந்தோனியாரின் புகழ்பரப்ப புதுமைகளை நாட்டிய 'நமது புனித அந்தோனியார்' என்னும் ஆங்கில மாதஇதழ் ஒன்றை வெளியிட்டார்.

சுவாமி பாலசுந்தரத்தின் பணிக்காலத்தில் நல்லூர்ப் பங்கில் கண்காணிப்பில் இருந்த இவ்வாலயம் மானிப்பாய் புனித அன்னம்மாள் ஆலய விசாரணைப் பங்குடன் இணைக்கப் பட்டது.

ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் புனிதர் மிகப் பிரியம் கொண்ட புனித சகாய அன்னையின் நவநாள் சடங்குகளை ஆரம்பித்து வைத்தார்.

அவரை அடுத்துப் பணிபுரிந்த சுவாமி பீற்றர் அவர்கள் புதிய ஆலய அத்திவாரம் இட்டார். சிலகாலம் தடைப்பட்டு விட்டகட்டிட வேலை தற்போது அநேக நன்கொடையாளரின் உதவியுடன் சிறப்பாக நவீனமாக எழுப்பப்பட்டுவருகின்றது.

இவ்வாலயம் வடும்நோன்மதி தினத்தன்று தனது திருவிழாவைச் சிறப்பிக்கின்றது. நோன்மதி முன்தினம் யாழ் துணைஆயர் எல். ஆர் அன்ரனி ஆண்டகை அவர்கள் உறுதிப்பூசுதல் என்னும் திருவருட்சாதனத்தை இவ்வாலயத்தில் வழங்குவார்கள். 22ம் திகதி இனிய இசையுடன் இனிதாகநடைபெறும். ஆடம்பர இசைத் திருப்பலியில் பக்தர்கள் பங்குபெற வசதிகள் செய்யப்படுகின்றன

மல்லி கிடைக்கும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணத்திற்கு கொத்தமல்லி வந்துவிட்டதாகவும்சகலருக்கும் கிடைக்கக் கூடியவிதத்தில் பங்கீட்டுகட்டுக்கு விநியோகிக்கப்படுமென்றும், யாழ் நகர பலநோக்கு கூட்டுறவு சமாஜ தலைவர் திரு அல்பிரட்துரையப்பா நேற்று தெரிவித்தார். அடுத்த வாரம்முதல் ஒவ்வொரு டிப்போக்களிலும் மல்லி கொடுக்கப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

எல்லா மாநிலங்களிலும் சிரணிப்படைகள்

சென்னை, ஜூன் 19

அறிஞர் அண்ணா முதல் அமைச்சராக இருந்தபோது தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டசிரணிபடை நல்லமுறையில் இயங்கிவருகிறது இது போன்று எல்லா மாநிலங்களிலும் சிரணிபடைகளை அமைப்பதற்கு இந்திய மத்திய அரசாங்கம் ஆலோசனை நடாத்திவருகிறது.

இப்படையினர் பள்ளிக்கூடம் கட்டுவது, கால்வாய் குளங்களைத் திருத்துவது வீதி அமைத்தல் போன்ற பல வேலைகளைச் செய்து சமூக சேவைகளில் ஈடுபட்டு வருவதினால் இத்திட்டம் பற்றிய விபரங்களை அனுப்பி வைக்கும்படி தி. மு. தமிழக அரசை மத்திய அரசு கேட்டுள்ளது. இவ்விபரங்களைப் பரிசீலனை செய்தபின் எல்லா மாநிலங்களிலும் சிரணிப்படை அமைக்கப்படவுள்ளதாகத் தெரிகிறது.

மணிவாக்கு

துன்பத்திற்கு காரணம் ஆசையே அதை ஒழித்தால் தான் ஆனந்தம் உண்டாகும். —புத்தர்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams; "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

[illegible] விரோதிகிருது வருஷம் ஆனிமாதம்
6-ந் திகதி (20-6-71)

பல மெம்பர் தொகுதிகள்

புதிய அரசியல் அமைப்பிலே பல மெம்பர் தொகுதிகள் நீடித்திருக்குமென்று அரசியலமைப்பு அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா அறிவித்துள்ளார். இது வரவேற்கத்தக்கது. பல மெம்பர் தொகுதிகள் இருக்கப்படாதென்றும், அது ஜனநாயகத்துக்கு மாறு என்றும் சிலர் கருத்துக்கள் தெரிவித்திருந்தனர். என்றாலும் அதை ஒப்புக்கொள்ளாமல், இப்போதுள்ள அரசியல் சட்டத்திலுள்ள ஏற்பாட்டை நீடிப்பதென்று தீர்மானித்துள்ளது. சிறப்பாக சிறுபான்மை சமூகத்தவர் பிரதிநிதித்துவம் பெற உதவியாகஇருக்கும்.

உதாரணமாக கொழும்பு மத்திய தொகுதியை எடுத்துக்கொள்வோம். அது மூன்று மெம்பர் தொகுதி சிறுபான்மை சமூகங்களைச் சேர்ந்த இருவர் அத்தொகுதியிலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. சிறுபான்மை சமூகத்தவருக்குப் பிரதிநிதித்துவம் கிடைக்க வேண்டுமென்றே சோல்பரி கமிஷனர்கள் பல மெம்பர் தொகுதிகளை ஏற்படுத்துவதாகத் தெரிவித்தனர். எக்காரணம் கொண்டும் இந்த ஏற்பாட்டை நீக்குவதாயின் சிறுபான்மை சமூகத்தவருக்கு ஏற்கெனவேயுள்ள பிரதிநிதித்துவமும் பாதிக்கப்படும். இதை உணர்ந்தே அரசியலமைப்பு அடிப்படைத் தீர்மானமும் இப்போதுள்ள தொகுதி நிர்ணயக் கொள்கைகள் இப்போதுள்ள, சட்டப்படியே நீடித்திருக்கும் என்று கூறுகின்றது.

மலைநாட்டு இந்திய வம்சாவளித் தொழிலாளர் தங்கள் பிரதிநிதிகளை புதிய பாரிலிமெண்ட் சபைக்குத் தெரிவுசெய்து அனுப்பமுடியுமா என்பது கேள்வி. ஏற்கனவே இச்சமூகத்தவர் நூறுபேர் அடங்கிய சபைக்கு ஏழு பேர்களைத் தெரிவுசெய்து அனுப்பினர், பின்னர் அவர்களில் பலர் வாக்குரிமையை இழந்ததால் ஒருவரைக்கூட அவர்கள் தெரிவு செய்ய முடியவில்லை. இதனால் அம்மக்களில் ஒருவரையோ இருவரையோ அரசாங்கம் நியமித்துவருகின்றது. நியமனமுறையை விட தேர்தல்முறையே பலவிதங்களிலும் சிறந்தது. ஆனால் பிரஜா உரிமை பெறும் இந்திய வம்சாவளியினர், பல தொகுதிகளில் சிதறியிருப்பதாதலால் அவர்கள் இனியும் தங்களில் ஒருவரைத் தெரிவு செய்து அனுப்பமுடியுமா என்பது சந்தேகம். இவர்களுக்கு வாய்ப்பாகதனியே தொகுதியை வகுக்க வேண்டுமென்று கொண்டுவரப்பட்ட ஒரு யோசனை மறுக்கப்பட்டதாலும் நியமன ஸ்தானங்கள் இனி இராததாலும் அம்மக்களுக்கு சபையில் பிரதிநிதித்துவம் இருக்குமா இராதா? இருக்குமாயின் எப்படி? என்பன முக்கிய கேள்விகள்.

இலங்கை- இந்திய ஒப்பந்தப்படி இங்கு இனியும் பல லட்சம் வம்சாவளியினர் தொடர்ந்திருந்து வருவர். அவர்களுக்குப் பல விசேஷ பிரச்னைகள் உள்ளனவாகையால் தேசிய சபையில் அவர்களுக்கு பிரதிநிதித்துவம் இருக்கவேண்டியது ஜனநாயகதர்மப்படி எவ்வளவு அவசியமென்பதை விளக்கத் தேவையில்லை. மலைநாட்டிலே இந்திய வம்சாவழியினர் அதிகமாக வாழும் சில தொகுதிகளை இருமெம்பர் தொகுதிகளாக்கி இந்திய வம்சாவளியினர் தேர்தெடுக்கப்படவாய்ப்பளிக்கலாம். அவர்களில் வாக்காளர் எண்ணிக்கை வெற்றிபெற முடியாதபடி குறைவாக இருக்குமாயின், அவர்களுக்காக சில ஸ்தானங்களை ஒதுக்கி அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வாய்ப்பளிக்கலாம்.

இந்திய அரசியலமைப்பிலே, ஹரிஜனங்களுக்காக பல ஸ்தானங்கள் இன்னும் ஒதுக்கப்பட்டு வருகின்றன. ஆனால் இலங்கையிலே ஹரிஜனங்கள் ஒருவர்கூட தேர்தல் மூலம் தேசிய சபைக்குத் தெரிவு செய்யப்படக்கூடிய நிலையில் இல்லை. ஆகவே அவர்களுக்காகவும், இருமெம்பர் தொகுதிகளை ஏற்படுத்தி அதில் ஒன்றை அவர்களுக்காக ஒதுக்கிவைக்கலாம். பெண்மணிகள் சிறப்பாகத் தமிழ்ப் பெண்மணிகள் பார்லிமெண்ட் சபையில் பிரதிநிதித்துவம் வகிக்காமலுள்ளனர். இதுபெரிய குறை பெண்களுக்காகவும் சில ஸ்தானங்களை சில வருடங்களுக்காவது ஒதுக்கிவைக்கலாம். முடிவான அரசியல் அமைப்பைத் தயாரிக்கும்போது, இந்த யோசனைகளையும் மனதில் இருத்துவதாயின், புதிய தேசிய சபையில் எல்லா மக்களுக்கும் பிரதிநிதித்துவம் கிடைக்கவும் இங்கு ஜனநாயகம் அமைதியாகவும் வெற்றிகரமாகவும் நடக்க உதவியாகவும் இருக்கும்.

ஆலய உற்சவம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

வட்டுக்கோட்டை வீரபத்திர சிவன்கோவில் வருடாந்த ஆனி உத்தர உற்சவம் இன்றுகொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. தொடர்ந்து 10 நாட்கள் பகல் அபிஷேக ஆராதனையுடன் பூசைகள் நடைபெற்று இரவு விஷேச மேளவாத்தியங்களுடன் சுவாமி வீதிவலம் வரும்காட்சியும் இடம் பெற்று 29-ம்30-ம் திகதியில் தேர், தீர்த்த உற்சவம் முடிவடையும்.

பாராட்டு

பருத்தித்துறை, சனி

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த சாரணர் படை சாரணர் ஆசிரியர் திரு. அ. ஜெகநாதன் தலைமையில் புத்தூர் கிராமச்சங்கப்பகுதியையும், அடுத்துள்ள சூழலையும் சிரமதானமூலம் துப்புரவு செய்து கொடுத்தனர். புத்தூர் கி. ச. தலைவர் சாரணமாணவரையும், தலைவரையும் அவர்களது சேவை உணர்ச்சிக்காகப் பாராட்டினர்.

எம். எஸ். பற்றி சினிமாப் படம்

புதுடில்லி, ஜூன் 19

இந்தியாவின் சிறந்த பாடகிகளில் ஒருவராகத் திகழும் திருமதி எம். எஸ். சுப்புலட்சுமி பாடுவதுபற்றி சினிமாப்படம் ஒன்றுதயாரிக்கப்படுகிறது. இந்திய மத்திய அரசாங்கத்தின் செய்திப்பட இலாகா தயாரிக்கும் இப் படத்தினை கேரளாவைச் சேர்ந்த அடூர் கோபாலகிருஷ்ணன் டைரக்ட்செய்வார். திருமதிசுப்புலட்சுமி பாடுவதுபற்றி இந்தப் படம் தயாரிக்கப்படும், திருமதி சுப்புலட்சுமி சிறந்த கர்நாடக இசை விற்பன்னர் என்பது தெரிந்ததே. இவர் சில தமிழ்ப் படங்களில் முன்னர் நடித்துப் புகழ் பெற்றவர்.

சிறந்த நாட்டியக்காரியான யாமினி கிருஷ்ணமூர்த்தி பற்றியும் சினிமாப்படம் தயாரிக்கப்படவிருக்கின்றது.

......

'திருவாசகம் தித்திக்கும் தேன்'

சுழிபுரம், சனி

திருவாசகம் எமக்கு ஓர் தித்திக்கும் தேன் அமுதாகும் ஆங்கில அறிஞன் போப் ஐயர் திருவாசக அமுதத்தை பருகி, அதன் சுவையை மேன்மையை உலகோர் அறியச்செய்த பெருமை அடைந்தார் எனில் நாம் ஏன் திருவாசகத்தை பருகக்கூடாது இன்று நம்மவரில் சிலர் போப்ஐயர் எழுதிய திருவாசகத்தையாகிலும் பருகமுன் வந்தது மிகவும் பாராட்டத்தக்கதாகும்"

இவ்வாறு தொல்புரம் பூகராசி அம்மன் கோவிலில் நடைபெறும் கும்பாபிஷேக திருவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி குறிப்பிட்டார்,

......

கடலுக்கடியில் 5 நாள் வாசம்

பிறிபோர்ட்(பஹாமாஸ்) ஜூன்.19

கடலில் சுழியோடி ஆராய்வு நடத்தும் நிபுணர்கள் மூவர் ஐந்து நாட்களாக கடல் மேல்பரப்பிலுள்ளவர்களின் எவ்வித உதவியுமின்றி தாமாகவே இயங்கி தம்மாராய்ச்சிகளைச் செய்துள்ளனர். இவ்விதம் கடலின் மேற்பரப்பிலுள்ளவர்களின் எவ்வித உதவியுமின்றி கடலின் அடியில் செயல்பட்டது இதுவே முதல் தடவையாகும்.

திரு றிக் வெசர், சாளஸ் மல்லின், ஆர்ட் சம்மர் ஆகிய மூவருமே இந்நிபுணர்களுமாவர்.

......

'ஆங்கில ஆசிரியரை நியமிக்குக'

குருநகர், சனி

மண்டைதீவு கார்த்திகேய வித்தியாசாலைக்கு ஆங்கில ஆசிரியர் ஒருவரை நியமிக்குமாறு மண்டைதீவு கிழக்கு கிராம முன்னேற்றச் சங்கம் வடபகுதி கல்வி அத்தியட்சகரை கேட்டுள்ளது.

கடந்த வருடம் 7 ஆசிரியர்களுடன் இயங்கிவந்த இப்பாடசாலை தற்பொழுது 4 ஆசிரியர்களுடன் மட்டும் இயங்கிவருகிறதெனவும், இப்பாடசாலை மாணவர்களுக்கு ஆங்கிலம் போதிப்பதற்கு ஆசிரியர் இல்லாதிருக்கிறதெனவும் சங்கம் கேட்டுள்ளது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971ம் ஆண்டு ஜூன் மீ 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

'நல்லூர் கலாசாலையை மூடாதீர்'

வல்வெட்டித்துறை, சனி

'நல்லூர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆரம்ப பாடசாலையாக போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இப்போது இதனை மூடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது. இக் கலாசாலையை மூடாமலிருக்க நடவடிக்கை எடுக்குமாறு கல்வி அமைச்சரைக் நகர சபை கேட்டுக் கொள்கிறது'

வல்வெட்டித்துறை நகர சபை மேற்கண்டவாறு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. நகரசபையின் விசேஷ கூட்டத்தில் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முதலாம் வட்டார உறுப்பினர் திரு இ சிவதாஸ் இப்பிரேரணையை அனுவதித்தார். 'மேலும் பல பயிற்சிக் கலாசாலைகள் உருவாக்கப்பட வேண்டிய இந் நேரத்தில் பயிற்சிக்கலாசாலைகளை மூடுவது நல்லதல்ல என்றும் அத்தீர்மானம் மேலும் கூறுகிறது.

இத் தீர்மானத்தின் பிரதிகள் தபால் தந்தி அமைச்சருக்கும், நல்லூர் எம். பி. க்கும் அனுப்பிவைக்கப் பட்டுள்ளன.

கோப்பாயில் 3 ஏக்கர் நிலத்தில் 'மக்கள் சந்தை'

யாழ்ப்பாணம், ஞாயிறு

கோப்பாயிலும் மக்கள் சந்தை நிறுவப்படவிருக்கிறது. இதற்காக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு முன்னால் உள்ள 3 ஏக்கர் முடிக்குரியக் காணியை வழங்கியுள்ளார்.

கோப்பாயில் மக்கள் சந்தையை நிறுவுவதற்கு உதவி உள்ளூராட்சி ஆணையாளர் சிபார்சு செய்ததைத் தொடர்ந்து அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு போயா தினத்திலும் நடைபெறவிருக்கும் மக்கள் சந்தையில் சகல பொருட்களையும் சுலபமாக வாங்கிக்கொள்ளலாம்.

மக்கள்சந்தை நிறுவும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டதாகவும் அடுத்த மாதம் இச்சந்தை திறந்து வைக்கப்படுமென்றும் கோப்பாய் கிராமசபைத் தலைவர் திரு. ரி பரமானந்தராஜா தெரிவித்தார்.

சோலைவரி அறவிட பொலிஸ் உதவி கிடைக்கும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

எல்லாக் கிராமச்சபைகளுக்கும் சோலைவரி அறவிடுவதற்குப் பொலிசார் உதவி தேவையானபோது வழங்கப்படும் என்று உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு. நல்லைநாதன் யாழ்ப்பாணத்தில் நடந்த கிராம சபைத் தலைவர்கள் மகாநாட்டில் தெரிவித்தார்.

இம்மகாநாட்டில் 45 கிராமசபைத் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு. நல்லைநாதன் மேலும் கூறியதாவது:

வருகிற செப்டம்பர் மாதத்திற்குள் கிராமச் சபைகளுக்கு வழங்கப்பட்ட நன்கொடைப் பணங்களைக் கொண்டு வேலைகளை ஆரம்பித்துவிடவேண்டும். அப்படிச் செய்யத் தவறினால் அப்பணம் வேறு நிதிக்கு ஒதுக்கப்பட்டுவிடும். ஆதலால் எல்லாக் கிராமசபைத் தலைவர்களும் நன்கொடைப் பணத்தைக்கொண்டு வேலைகளை ஆரம்பிக்க முன்வரவேண்டும். 14 தினங்களுக்குள் வரிக்காசுகள் எல்லாம் கட்டப்பட வேண்டும். இல்லாவிடில் அதுசம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

ஓர் அங்கத்தவர் 3 கூட்டத்திற்குத் தொடர்ந்து வராவிட்டால் அதுபற்றிக் கிராமசபைத் தலைவர் உடனடியாக சபைக்கு அறிவிக்கவேண்டும். அந்த அங்கத்தவர் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

உற்சவம்

பருத்தித்துறை, சனி

வரணியூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த திருவிழாக்கள் இம்மாதம் 27-ந் திகதியன்று கொடியேற்றத்துடன் ஆரம்பித்து ஆடி மாதம் 7-ந் திகதித் தீர்த்தத்துடன் முடிவடையும்.

0 10 0

கோப்பாய், ஞாயிறு

கோப்பாய் வீரபத்திர சுவாமி கோவில் வருடாந்த அலங்கார உற்சவம் நாளை ஆரம்பமாகவுள்ளது. 30-ந் திகதி ஆனி உத்தர உற்சவமும் மறுநாள் பூங்காவனம் திருக்கல்யாணவிழாவுடனும் வைபவம் பூர்த்தியடையும்.

இவ்விழாக்கள் யாவும் கோப்பாய் சிவஸ்ரீ பிரணதார்த்திஹரக்குருக்கள் தலைமையில் நடைபெறும்.

ரூபா 100 கிடைக்கும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் உள்ள வாளி மலசல கூடங்களை குழி மலசல கூடங்களாக மாற்றுவோருக்கு உதவியளிக்க மாநகரசபை முன்வந்துள்ளது.

குழி மலசலகூடமாக மாற்றும் ஒவ்வொருவருக்கும் 100 ரூபா பெறுமதியான குழி மலசலகூடத்திற்குத் தேவையான பொருள்கள் இலவசமாக வழங்கப்படும் என மேயர் திரு. அல்பிரட் துரையப்பா நேற்றுத் தெரிவித்தார்.

பாடசாலைகளில் கணக்கெடுப்பு

பருத்தித்துறை, சனி

வடமராட்சிப் பாடசாலைகளில் கல்விப்பகுதி உத்தியோகத்தர் வருடாந்தக் கணக்கெடுப்பு நடாத்தி வருகிறார்கள்.

நிவாரண நிதிக்கு கி.ச உதவும்

யாழ்ப்பாணம் ஞாயிறு

பயங்கரவாதிகளினால் பாதிக்கப்பட்டவர்களின் நிவாரண நிதிக்கு பணம் சேர்த்து வழங்குவது பற்றி யாழ் மாவட்ட கிராமசபை தலைவர்களின் சமாஜத்தின் அடுத்த கூட்டத்தில் ஆராயப்பட விருப்பதாக சங்கச் செயலாளர் திரு ரி பரமானந்தராஜா தெரிவித்தார்.

நேற்று யாழ் அரசாங்க செயலகத்தில் நடைபெறவிருந்த சமாஜத்தின் விசேட பொதுக்கூட்டம், ஒத்திவைக்கப்பட்டுள்ளது. மின்சார உபகரணங்கள் பெறுவதில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு இருந்து வரும் கஷ்டங்கள் பற்றியும் அடுத்த கூட்டத்தில் ஆராயப்பட விருக்கிறது.